# மெட்ரோவில் கார், 'சார்ஜர்'



■ நந்தனம் மெட்ரோ ரயில் நிலைய வளாகத்தில் துவக்கப்பட்டுள்ள மின்சார கார், 'சார்ஜர்' வசதி.

**சென்னை, அக். 2–**

நந்தனம் மெட்ரோ ரயில் நிலைய வளாகத்தில், மின்சார கார்களுக்கான, 'சார்ஜர்' வசதி, நேற்று முன்தினம் முதல் செயல்பாட்டுக்கு வந்தது.

நந்தனம் மெட்ரோ ரயில் நிலைய வளாகத்தில், தனியார் நிறுவனம் சார்பில், 'இவி சார்ஜர் பெசிலிட்டி' என்ற பெயரில், இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில், நேரம் ஒதுக்கீடு பெற, 'மொபைல் ஆப்' வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

நந்தனத்தை தொடர்ந்து, கோயம்பேடு, அண்ணா நகர் கிழக்கு, உயர் நீதிமன்றம் ஆகிய மெட்ரோ ரயில் நிலைய வளாகங்களிலும், இந்த வசதி ஏற்படுத்தப் பட உள்ளது.